# 11.தாஜிகிஸ்தான்

*இ.ஜே.சுந்தர்*



**சோ**வியத் ஒன்றியம் 15 துண்டுகளாக உடைந்தபோது அதில் சிதறிய சிறிய துண்டுதான் தாஜிகிஸ்தான். 1,43,100 ச.கிமீ அளவே உள்ள இந்த நாடுதான் மத்திய ஆசிய நாடுகளில் பரப்பளவில் சிறிய நாடாகும். பரப்பில் இங்கிலாந்தை விடப்பெரியது. ஆனால் இலண்டன் அளவே மக்கள் தொகை கொண்டது. காரணம் நாடு 90% கரடுமுரடான மலைகளால் ஆனது. ஏறத்தாழ

80 இலட்சம் மக்கள் வாழும் இந்நாட்டில் 80% மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த நாடுகளில் மிகவும் ஏழ்மையானது தாஜிகிஸ்தான். தனிநபர் சராசரி வருவாய் $ 2104 மட்டுமே. (ரஷ்யா-$14,920)




இந்நாட்டின் எல்லைகளாக தெற்கே ஆப்கனிஸ்தான், மேற்கே உஸ்பெகிஸ்தான், வடக்கே கிர்கிஸ்தான், கிழக்கே சீனா ஆகியன உள்ளன. ஆப்கனிஸ்தானின் ஒருபகுதியாகிய வாகான் இடைவழி தாஜிக்- பாகிஸ்தான் இடையே அமைந்து இவ்விரு நாடுகளின் எல்லைகளைப் பிரிக்கிறது. இருநாடுகளும் அடுத்தடுத்து இருப்பினும் இவ்விரு நாடுகளின் எல்லைகள் சந்திப்பதில்லை. சீனாவும், பாகிஸ்தானும் தாஜிகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடுகள்.

சுற்றுப்பயணிகளைவிட சாகசப்பயணிகளுக்கு இந்நாடு சொர்க்கபூமியாகும்.

பாமிர், அலோ மலைப்பகுதிகளில் மலையேற்றம், பனிச்சறுக்கல், மலை உச்சியில் சைக்கிள் ஓட்டல் முதலிய சாகச விளையாட்டுகளுக்குச் சிறந்த நிலைகளம் இந்நாடு.



பாதி நாடு கடல்மட்டத்திலிருந்து 9800 ச.அடிக்கு மேல் உயர்ந்துள்ளது.



**இதுபோல 7000 சிகரங்கள்**

இந்நாட்டில் உள்ள 7000 மலைச்சிகரங்கள் பலவும் பருவகால இருப்பிடங்களாகும். முன்னைய சோவியத் ஒன்றியத்தில் மிக உயரமான கம்யூனிச சிகரம் இந்நாட்டிலுள்ளது. இந்நாட்டின் புகழ்பெற்ற மன்னன் இஸ்மொய்லி சோமோனியின் பெயர் இப்போது இச்சிகரத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது. எட்டி என்ற பனிமனிதனை இங்குள்ள பாமிர் மலைப்பகுதியில் ரஷ்ய வீரர்கள் பார்த்ததாகக் கூறுகின்றனர்.


இதுபோல 900 நதிகள்

10. கி.மீ க்கு மேல் நீளமுள்ள 900 நதிகள் இந்தக் குட்டி நாட்டில் வலம் வருகின்றன. நாட்டின் பரப்பில் 2% ஏரிகள் அமைந்துள்ளன. 2255 மீட்டர் உயரத்தில் 2.5 கி.மீ நீளமும், 1 கி.மீ அகலமும் உடைய இஸ்கந்தர்குல் ஏரி மிக அழகானது.


இஸ்கந்தர்குல் ஏரி

கிரேக்க மாமன்னன் அலெக்சாண்டரைக் கவர்ந்தது. அவன் பெயரால் அழைக்கப்படுவது. உலகிலேயே உயரமான நியூரெக் என்ற அணை இந்நாட்டிற்குப் பெருமை சேர்க்கிறது. வெப்பமான கோடையும், மிதமான குளிர்காலமும் நாட்டின் பெரும்பாலான இடங்களில் நிலவுகின்றன.

மக்களில் 80% பேர்கள் தாஜிக் மொழிபேசும் தாஜிக் இனத்தவர். தாஜிக் மொழி பாரசீக மொழியின் கிளைமொழியாகும்.அதிகாரப்பூர்வமான மொழி தாஜிக். எனினும் டாரி, உஸ்பெக், ரஷ்யன் ஆகிய மொழிகளும் வழக்கில் உள்ளன. தாஜிகியர்கள் தோற்றத்தில் அயலில் வாழும் துருக்கிய இனங்களில் இருந்து மாறுபட்ட உருவத் தோற்றம் கொண்டவர்கள். 98% மக்கள் இசுலாமியர்கள். அதிலும் 95% மக்கள் சன்னி முஸ்லீம்கள்; 3% ஷியாக்கள். எனினும் இந்நாடு மதச்சார்பற்ற நாடாக கருதப்படுகிறது. தாஜிக் முஸ்லிம்கள் சூபிசம் எனப்படும்

ஆன்மீகத்தைத் தேடும் இஸ்லாமிய மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சூபிசத்தைப் பின்பற்றுபவர்கள் மதக் கட்டுப்பாடுகளைக் கொண்டிராதவர்கள். இருப்பினும் ஏழை தாஜிக்குகள் பலர் சவூதி அரேபியா மற்றும் பணக்கார மத அடிப்படைவாத நாடுகளிலிருந்து வந்த பணப்பொழிவால் தீவிரவாத வஹாபிச இஸ்லாமிய பிரிவைத் தழுவினார்கள்... இன்று தாலிபான், அல்கய்தா போன்ற இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்கள் யாவும் வஹாபிச இஸ்லாமைப் பின்பற்றுகின்றன.. எனவே தீவிரவாதிகளின் தாக்கம் இந்நாட்டிற்கு இப்போது பெரும் சவாலாக உள்ளது.

பாரசீகப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய இப்பகுதி முன்பு முதலாம் தாரியுஸ் அரசனால் ஆளப்பட்டு வந்தது. பின் கி.மு 333 இல் பேரரசன் அலெக்சாண்டரால் கைப்பற்றப்பட்டது. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் அரேபியர்கள் இந்நாட்டை வென்று இசுலாமை இங்கு கொணர்ந்தனர். பின் உஸ்பெக்குகளும், ஆப்கனியர்களும் தொடர்ச்சியாக இந்நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். அதன்பின் 1860 இல் இந்நாடு ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் வந்தது. 1924 இல் உஸ்பெக்குடன் சோவியத் ஒன்றியத்தில் இணைந்து, பின் 1929 இல் முழு சோவியத் குடியரசானது. 09.09.1991 அன்று தனி நாடாகத் தன்னை அறிவித்துக்கொண்டது. 21.12.1991 அன்று அதிபர் கோபர்சேவுக்கு எதிராக கம்யூனிச தலைமை நிகழ்த்திய கலகத்தை 10 சோவியத் குடியரசுகளுடன் தாஜிகிஸ்தானும் ஆதரித்து விடுதலையை முழுமையாக்கியது.. நவம்பர்,1992 இல் அதிபர் ஆட்சி நீக்கப்பட்டு, நாடாளுமன்ற மக்களாட்சியாக தாஜிகிஸ்தான் மலர்ந்தது.

சோவியத்துடன் இருந்தபோது இல்லாத புதுப்பிரச்சினைகள் விடுதலைக்குப்பின் வெடித்தன. ஆட்சியில் இருந்த கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக எதிர்க்கட்சியினரும், இசுலாமிய குழுக்களும் ஆயுதமேந்தி உள்நாட்டுக்கலவரத்தில் ஈடுபட்டனர். பல ஆண்டுகள் நீடித்த இந்த உள்நாட்டுப்போரில் ஒரு இலட்சம் பேர் மாண்டனர்; 5 இலட்சம் பேர் நாட்டை விட்டு ஓடினர்; 12 இலட்சம் பேர் அனைத்தும் இழந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாயினர். ஒருவழியாக ரஷ்யாவின் தலையீட்டால் 27.06.1997 அன்று அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது..



தாஜிக் தொழிலாளர்கள்

பெரும்பாலான மக்கள் வறுமையிலும் வேலையின்மையிலும் திண்டாடும் நிலையில் 10 இலட்சம் பேர்கள் வேலைதேடி அயல்நாடுகளுக்கு, பெரும்பாலும் ரஷ்யாவிற்குச் சென்றுள்ளனர். அங்கு தாஜிக் ஆண்கள் தாழ்வான வேலைசெய்வதும், ரஷ்ய வெள்ளை வெறியர்களால் அடிபடுவதும், சாகடிக்கப்படுவதும் அடிக்கடி நிகழ்வதாகும். எனினும் வெளிநாடு சென்று தொகை அனுப்புவோரால் நாட்டிற்கு 47% வருவாய் (ஆண்டுக்கு $1.2 பில்லியன்) கிடைக்கிறது. ஏற்றுமதியாகும் அலுமினியமும், பருத்தியும் நாட்டின் வருவாயில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாட்டு நாணயம் சோமோனி என்பதாகும். ஊழல், சீரற்ற பொருளாதாரப் புரட்சி, நிர்வாகச்சீர்கேடுகள் இவற்றால் நாட்டின் பொருளாதாரம் நொறுங்கும் நிலையில் உள்ளது. ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி இந்நாட்டுப் பொருளாதாரத்தை மேலும் பாதித்து வருகிறது.

போதைப்பொருள் கடத்தல் வழியும் நாட்டுக்குச் சட்டவிரோத வருவாய் வருகிறது. ரஷ்யா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஆப்கானின் போதைப்பொருள்கள் தாஜிகிஸ்தான் வழியாகக் கடத்தப்படுகின்றன. ஹீரோயின், ஓப்பியம் முதலிய போதைப்பொருள்களைக் கடத்திப்பிடிபட்ட நாடுகளில், இந்நாடு 3வது இடம் வகிக்கிறது. முன்னைய உள்நாட்டுப்போரில்

பங்குகொண்டு தற்போது அரசியலில் முக்கிய பதவிகளில் உள்ளோர் போதைப்பொருள் கடத்தலில் தொடர்புடையவர்களாவர்.

பக்கத்து நாடான ஆப்கனிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் எழுத்தறிவுடையோர் முறையே 38.2%, 58.7% என்ற அளவில் இருக்க, ஏழை நாடான தாஜிஸ்தானில் மக்கள் 99.5% எழுத்தறிவுடையோராய் உள்ளனர். சோவியத் ஒன்றியத்தில் முன்பு இருந்த தாக்கத்தால் அனைவருக்கும் இலவச கட்டாயக்கல்வி தரும் நிலை தொடர்கிறது.




தேசியப் பல்கலைக்கழகம்

சோவியத் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் இன்னும் சிறப்பாகச் செயல்படுகின்றன. எனினும் வறுமை காரணமாகவும், மகளிர் ஒடுக்குமுறை காரணமாகவும் 25% பெண்கள் கட்டாயத் தொடக்கக்கல்வியை முடிப்பதில்லை.

விருந்தோம்பல், பணிவுடைமை, மரியாதை, முதியவர்களுக்குச் சிறப்பிடம் தருதல், முதலியன இவர்கள் கடைப்பிடிக்கும் நற்பண்புகள். பெண்கள் கண் புருவங்கள் இரண்டையும் இணைத்துக்கொள்வதே அழகு என்று கருதி இருபுருவங்களையும் மையிட்டு இணைக்கின்றனர். பெண்கள் மட்டுமே உள்ள வீட்டில் ஆண்கள் நுழையவே கூடாது. ஒரு பெண் ஒரு ஆணுடன்

தனியே இருத்தல் கூடாது. பொது நிகழ்வுகளில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே பிரித்தே வைக்கப்படுவர். முன்பு இங்கு நிலவிய ஜோரோஸ்ட்ரி சமயம் இவர்கள் பண்பாட்டில் சில நம்பிக்கைகளை வேரூன்ற வைத்துள்ளது. தினசரி வாழ்வைச் சில அதீத சக்திகள் பாதிப்பதாகப் பலரும் நம்புகின்றனர். தீமையிலிருந்து தம்மைப் பாதுகாக்க தாயத்து அணிவர். நோயிலிருந்து விடுபடவும், சூன்யம் நிகழ்த்தப்படாமலிருக்கவும் சோதிடர்களையும், மந்திரக்காரிகளையும் நாடுவர். பொதுவுடைமை நாட்டில் அங்கம் வகித்தும் இந்நம்பிக்கைகள் நீங்கவில்லை. பாரசீகக் கவிஞர் உமர்கயாம், அலிஷெர் நவோஸ் ஆகியோரை தாஜிக்கள் தங்கள் இலக்கிய பாரம்பரியத்திற்குரியவர்களாய் உரிமை கொண்டாடுகின்றனர்.

நாடு 4 நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு துஷன்பே தலைநகரமாக விளங்குகிறது. இங்கிருந்து புதுடில்லி உட்பட உலகில் பல முக்கிய நகரங்களுக்கு விமானப் போக்குவரத்து உள்ளது. நாட்டில் மொத்தம் 26 விமான நிலையங்கள் உள்ளன.


**தாஜிக் கொடி**

துஷன்பேயிலுள்ள 165 மீட்டர் உயரக் கொடிக் கம்பமே உலகில் மிகப் பெரியதாகும். தலைநகரிலிருந்து 15 கி.மீ தொலைவிலுள்ள அய்னி இராணுவ விமான தளத்தை $70 மில்லியன் செலவில் இந்திய அரசு புதுப்பித்துத் தந்துள்ளது. இதுவே இந்நாட்டின் முக்கிய விமானப் படைத்தளமாகும். ஆப்கான் தாஜிகிஸ்தானை இணைக்கும் 135 நீள தொங்கு பாலத்தை அமெரிக்கா கட்டிக்கொடுத்துள்ளது.



தாஜிக்- ஆப்கான் நட்புப்பாலம்


இது தாஜிக்- ஆப்கன் நட்புப்பாலம் என அழைக்கப்படுகிறது. இந்நாட்டிலுள்ள கோட்ஜன்டு நகர் பழைய பட்டுப்பாதையில் முக்கிய இடம் வகித்ததாகும்.

ஐரோப்பாவிலிருந்தும், ஆசியா நாடுகளிருந்தும் நெடுந்தூரம் பயணித்து மிகச்சிறந்த குதிரைகளை இங்குள்ள பெர்கானா பள்ளத்தாக்கிலிருந்து தான் முன்பு வாங்கிச்செல்வர். இன்று இவ்விடம் பழம்பெருமை பேசும் சுற்றுலாத் தலமாக உள்ளது. இப்பகுதியிலிருந்து தான் இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் இந்தியாவிற்கு வந்தார். இறந்த ஆட்டை, குதிரையில் அமர்ந்தபடி அடித்து ஆடும் புஸ்கஷி என்ற ஒருவகை போலோ விளையாட்டே இந்நாட்டின் தேசிய விளையாட்டாகும். விடுதலைக்குப்பின் இந்நாட்டில் 3 பேர் ஒலிம்பிக் பதக்கங்கள் பெற்றுள்ளனர். உலகெங்கும் போலியோ நோய் குறைந்து வரும் நிலையில் இந்நாட்டில் உயர்ந்து வருகிறது. 2010 இல் 976 பேர் போலியோவுக்கு இரையாகியுள்ளனர். பெரும்பாலும் ஏழைகளாக உள்ள 1,04,272 ஊனமுற்றவர்களும் இங்குள்ளனர். மக்களின் சராசரி ஆயுள் 66.38 (2012)


அதிபர் இமோம் அலி ரகுமான்

1992 இல் முந்தைய பிரதமர் அப்துமாலிக் அப்துல்லாஜனோவை தோற்கடித்து இந்நாட்டின் அதிபராக வந்தார் இமோம் அலி ரகுமான். இந்நாள் வரை இவரே தொடர்ந்து பல தேர்தல்களிலும் வென்று அதிபராக உள்ளர். இவர் ஆட்சியில் எதிர்கட்சியினர் சிறையிலடைக்கப்பட்டனரென்றும் சுதந்திரமான ஊடகங்கள் ஒடுக்கப்பட்டனவென்றும், ஊழல் பெருக்கெடுத்துள்ளதென்றும், மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளனவென்றும் குற்றச்சாட்டுகள் உள்ளன. தம் மகனின் திருமணத்தில் இவர் மது அருந்திவிட்டுப் பாடிய காட்சி யு-டியூபில் வெளிவந்தது. இதன் விளைவாக யு- டியூபையே தம் நாட்டில் தடைசெய்தார். தொலைதொடர்பிலும், வணிகத்திலும் தொடர்பு மொழியாக விளங்கி வந்த ரஷ்ய மொழியின் முக்கியத்துவத்தைச் சட்டதிருத்தம் கொண்டு வந்து நீக்கினார். ஓவ், ஓவ்னா, எவ், ஓவிச் என்று ரஷ்ய மொழி மரபில் முடியும் பெயர்களில் இவ்வொலியை நீக்கி, தாஜிக் மொழி மரபைப்

புகுத்த வற்புறுத்தினார். தம் பெயரிலும் இதற்கு முன் இருந்த ரகுமானோவ் என்பதை ரகுமான் ஆக்கினார். மேலும் இசுலாமியர்கள் அரபுப் பெயர்கள் வைப்பதற்கும் தடை கொணர்ந்தார். நாட்டின் பாரம்பரிய பண்பாட்டைப் பாதுகாக்க அரபி மயப்படுத்துவதைத் தடை செய்தார். இசுலாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். பெண்கள் ஹிஜாப் என்னும் தலையங்கிகளை அணிவதும், ஆண்கள் தாடி வளர்ப்பதும் தடைசெய்யப்பட்டன.



தாடிகள் மழிக்கப்படல்

நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் 13,000 ஆண்களின் தாடிகளைக் காவலர்கள் மழித்தனர். நாட்டில் 98% பேர்கள் முஸ்லீம்களாக உள்ள நிலையில் இந்நிலை அதிகரிக்காவண்ணம் 18 வயதிற்குக் குறைந்த வயதினர் அந்நாட்டின் மசூதிகளிலும், கிறித்துவ தேவாலயங்களிலும் வழிபாடுசெய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது.. மேலும் 20 வயதிற்குட்பட்ட பெண்கள் காதணி மட்டுமே அணியலாம். பச்சை குத்திக்கொள்வதற்கும், இரவு கிளப்களுக்குப் போவதற்கும், ஆபாசம், தீவிரவாதம், முதலியவற்றைத் தூண்டும் திரைப்படங்களைப் பார்ப்பதற்கும், புத்தங்களைப் படிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


தாஜிக் மணமகள்

.மக்கள் வறுமைக்குள்ளாவதைத் தடுக்க திருமணம் முதலிய விருந்துகளுக்கு அழைப்பு விடுக்கவும் கட்டுப்பாடு உண்டு.தம் வருவாய் அடிப்படையில் தான் விருந்தினர்களை அழைக்கமுடியும்.


அதிபர் மாளிகை

தாஜிகிஸ்தான் இரு பெறும் வல்லரசுகளான ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் இடையில் சிக்கியுள்ள பகுதி ஆகும். ஒரே மொழி பேசும் சகோதர்கள் என்று கூறிக் கொண்டு, ஈரானும் அடிக்கடி மூக்கை நுழைக்கின்றது. போதாக்குறைக்குத் தெற்கே ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் நிலை கொண்டுள்ளன. தாஜிகிஸ்தான் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளது. மேலும், எண்ணெய், எரிவாயு போன்ற இயற்கை வளங்களைக் கொண்ட மத்திய

ஆசியாவின் ஒரு பகுதியாகவும் உள்ளது. எனவே இந்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வல்லரசுப் போட்டி, நடந்து கொண்டிருக்கிறது.